www.Padasalai.Net www.CBSEtips.in

## கொமரசாமிக் கவுண்டர் பதின்ம மேல்நிலைப்பள்ளி - குருமந்தூர்

## மாதாந்திரத் தேர்வு - ஆகஸ்ட் - 2023

## பத்தாம் வகுப்பு

காலம் : 1.30 மணி | தமிழ் | மொத்த மதிப்பெண்கள் : 50

### பகுதி - அ

I. சரியான விடைையைத் தேர்ந்தெடு : 7 X 1 = 7

1. காசிக்காண்டம் என்பது -

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப்பாடும் நூல்

ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

2. பின்வருவனவற்றுள் முறையான தொடர் -

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

ஈ) தமிழர் வாழை பண்பா ட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

3. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

4. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

5. ஸ்டீபன் ஹாக்கிங் எழுதிய நூல்களுள் 'காலத்தின் சுருக்கமான வரலாறு' என்ற நூல் ............ மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

அ) ஐந்து ஆ) ஐம்பது இ) நாற்பது ஈ) முற்பது

6. வளர்வானம் என்பதைக் குறிக்கும் தொகை

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) வேற்றுமைத் தொகை ஈ) உம்மைத்தொகை

7. குலசேகராழ்வாரின் காலம்

அ) பதினாறாம் நூற்றாண்டு ஆ) இரண்டாம் நூற்றாண்டு

இ) எட்டாம் நூற்றாண்டு. ஈ) ஆறாம் நூற்றாண்டு

### பகுதி - ஆ

II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி: 3 X 2 = 6

கேள்வி எண் “9“ கட்டாய வினா.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

8. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

9. ஆராயாது ஆட்சி செய்யும் மன்னனைக் குறித்துக் கூறப்பட்டுள்ள செய்தி யாது?

10. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடி உண்டாயினும் இல் - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

11. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

12. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய் மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

<u>பகுதி - இ</u>

<u>III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி</u>: 2 X 3 = 6

13. விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கம் குறித்து காசிக்காண்டம் குறிப்பிடும் செய்தி யாது?

14. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். – என்ற குறளுக்கு அலகீட்டு வாய்ப்பாடு எழுதுக.

15. வாளால் அறுத்து எனத்தொடங்கும் பெருமாள் திருமொழியை எழுதுக.

<u>பகுதி - ஈ</u>

IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி : 3 X 5 = 15

16. விருந்தோம்பல் அன்றும் இன்றும் எவ்வாறு உள்ளது என வேறுபடுத்திக் காட்டுக.

17. காட்சியைக்கண்டு கவினுற எழுதுக.



18. தமிழாக்கம் தருக.

**Respected ladies and gentlemen , I am Ilangovan studying tenth standard .I have come here to say a few words about our Tamil culture . Sangam literature shows that Tamils**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India. Srilanka , Malaysia ,Singapore , England and Worldwide. Though out culture is very old , it has been updated consistently . We should feel proud about our culture .Thank you one and all .**

19. "தம்பி.. உனக்குப் பிடிச்ச காய் சொல்லு?" - "கேரட்"

"பிடிச்ச பழம்?" - "ஆப்பிள்"

பிடிச்ச காலை உணவு? - "நூடுல்ஸ்"

"மத்தியானத்துக்கு" - "ஃப்ரைடு ரைஸ்"

"ராத்திரி...?" - "பீட்ஸா அல்லது பாஸ்தா"

இது ஏதோ ஆங்கிலப்படத்தின் வசனம் அல்ல." சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர்" என்று என்னிடம் அழைத்து வரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல். ஒட்டுமொத்த இளைய தலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும், சாம்பார் சாதமும். கத்தரிக்காய்ப் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில், 'ஆம், காணாமல் போய்விடும்'! உங்கள் குழந்தைகள், "ஆடு, மாடுகளைத் தவிர மனுஷங்க கூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி? என எதிர்காலத்தில் கேட்கக்கூடும்!

மருத்துவர் கு. சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?

20. "உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது" குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் "கடிதம்" எழுதுக.

<u>பகுதி - ஈ</u>

V. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி: 2 X 8 = 16

21. வீட்டில் திண்ணை அமைத்த காரணம் , விருந்தினர் பேணுதல் , தமிழர் பண்பாட்டில் ஈகை பசித்தவருக்கு உணவிடல் - இவை போன்ற செயல்கள் அன்றும் இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பதை அழகுற விவரித்து எழுதுக.

22. "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் "விண்வெளிப்பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

23. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்றுவந்த நிகழ்வைக் கட்டுரை ஆக்குக

www.Padasalai.Net